<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

**<u>REA.No. 2/2024</u>**

**<u>in</u>**

**<u>REP.No.36/2013</u>**

மனுதாரர்களின் தரப்பு 2–சாட்சியின் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தியாகராஜீ | ம.சா | : | 2 |
| த/க/பெயர் | : | தங்கவேலு | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| ஊர் | : | எலந்தகுட்டை | தாலுக்கா | : | குமாரபாளையம் |
| வயது | : | 41 | நாள் | : | 24–09–2025 |

**<u>முதல் விசாரணை:–</u>**

1. நான் தற்பொழுது எலந்த குட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். சாட்சியமளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அழைப்பாணையில் புல எண்கள் 184/1சி 184/4சன் புலவரைபடம் சிட்டா ஆவணங்களோடு நேரில் ஆஜராகி சாட்சியமளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி மேற்படி ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் எடுத்து வந்துள்ள கிராம வரைபடத்தில் மற்றும் அ பதிவேட்டில் மற்றும் மற்றும் சிட்டாவில் புல எண் 184 /1C க்கு செக்குபந்தியாக குமரபாளையத்திலிருந்து வெப்படை பிரதான சாலைக்கும் தெற்கு, சோமசுந்தரம் பாகத்திற்கும் கிழக்கு, தென்வடல் ரோட்டிற்கும் மேற்கு, சர்வே எண். 184/1D என்று மேற்படி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. நான் எடுத்து வந்துள்ள கிராம வரைபடத்தில் மற்றும் அ பதிவேட்டில் மற்றும் மற்றும் சிட்டாவில் புல எண் 184/4சி செக்குபந்தியாக தென்வடல் ரோட்டிற்கும் மேற்கு, 18 அடி ரோட்டிற்கும் கிழக்கு, சர்வே எண். 184/4D க்கும் வடக்கு, புலஎண். 184/4Bக்கும் தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புல எண்கள் 184/1C மற்றம்

184/4C க்கும் இடையே வேறு புல எண்கள் ஏதேனும் உள்ளதா என்றால், 184/1D மற்றும் 184/4B ஆகியவைகள் உள்ளன. புல எண் 184/1C ன் விஸ்தீரணம் 4 ஏர்ஸ் ஆகும். புல எண் 184/4C ன் விஸ்தீரணம் 4 ஏர்ஸ் ஆகும். மேற்படி இரண்டு சர்வே எண்களுக்கும் ஒரே செக்குபந்தியா, அல்லது வெவ்வேறு செக்குபந்தியா என்றால், வெவ்வேறு செக்குபந்தி ஆகும்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :–</u>**

**(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2025.09.24 17:22:55 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.